1978 செப்டம்பர் 12]

தொண்டி துறைமுகச் சீர்திருத்தம்

*வின எண். 167.—திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்கு விடையளிப்பாரா :—

முகவை மாவட்டத்திலுள்ள தொண்டியை துறைமுகமாக சீர்திருத்தம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, முகவை மாவட்டத்தில் உள்ள தொண்டி துறை முகத்தைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று இதே சட்ட மன்றத்திலும் கோரிக்கைகள் வைக்கப்பட்டு உள்ளன, ஆகவே, இனிமேலாவது மறு பரிசீலனை செய்து அந்தத் துறைமுகத்தை சீர்திருத்த அரசு ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, தொண்டி துறைமுகத்தைப் பொறுத்த வரைக்கும் அங்கே எந்த விதமான போக்குவரத்தும் இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு நடைபெறாத காரணத்தாலும், எதிர்காலத்தில் அந்தத் துறைமுகத்தில் போக்குவரத்து நடைபெறும் சாத்தியக்கூறு இல்லாத காரணத்தாலும் 23—12—1975-ல் அந்தத் துறைமுகத்தை மூடிவிட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, மத்திய அரசுக்கும் அது பற்றி தெரிவித்து, நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. ஒ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு அந்தத் துறைமுகத்தில் போக்குவரத்து இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் காலத்தில் பர்மாவில் இருந்து கொண்டுவரப்பட்ட தேக்கு மரம் அந்தத் துறைமுகத்தில் தான் இறக்கப்பட்டது. இன்றும் வெளிநாட்டு நாணயத்தைச் சம்பாதித்துக் கொடுக்கும் இறால் போன்ற மீன் வகைகள் அங்கே தான் அதிகமாகக் கிடைக்கின்றன. ஆகவே, அந்தத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, ஒரு துறைமுகத்தை மீண்டும புதுப்பித்து, அதை நடைமுறையில் கொண்டு வருவது என்றால் ஏகப்பட்ட பொருள் செலவு செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. இத் துறைமுகத்தைப் பொறுத்த வரையில் தேவையான போக்குவரத்து இல்லை என்று ஏற்கனவே

அளிக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. போக்குவரத்து மிகுதியாகும் வாய்ப்பு இருந்தால் மீண்டும் அதை புதுப்பிப்பதைப் பற்றி ஆய்வு செய்யலாம்.

அண்ணு விவசாயப் பண்ணையில் பழச் செடிகள் கொள்முதல்.

* வினு எண். 168—திரு. துரை முருகன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் குடுமியான் மலையில் உள்ளஅறிஞர் அண்ணு விவசாயப் பண்ணைக்கு நடப்பாண்டில் (1977–78) பழச் செடிகள் ஏதேனும் வாங்கப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய்க்கு வாங்கப்பட்டது ?

(இ) அப்படி வாங்கி இருந்தால் வாங்குவதில் எந்த முறை கையாளப்பட்டது?

(ஈ) தனியார் நர்சரிகளில் அப்பழச் செடிகள் வாங்கப்பட் டனவா ?

(உ) ஆம் எனில், யார் யாரிடத்தில் எந்த அடிப்படையில் எவ்வளவு செடிகள் வாங்கப்பட்டன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :— (அ) ஆம்.

(ஆ) ரூ. 8,580க்கு, 7,800 மாங்கன்றுகள் ஒட்டு செய்வதற் காக வாங்கப்பட்டன.

(இ) தனியார் நாற்றுப் பண்ணைகளிலிருந்து விலைப்பட்டியல் வாங்கப்பட்டன. விலை குறைவான விலைப் பட்டியலை ஏற்றுக் கொண்டு அதைக் கொடுத்த நிறுவனத்திடமிருந்து மாங்கன்றுகள் வாங்கப்பட்டன.

(ஈ) ஆம்.

(உ) குறைந்த விலைப் பட்டியலைக் கொடுத்த திருப்பத்தூர் வி. சிவராம் பிரசாத் நிறுவனத்திடமிருந்து 7,800 மாங்கன்றுகள் வாங்கப்பட்டன.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : பேரவைத் தலைவரவர்களே, முதலில் நான் தெரிவிக்க விரும்புவது, அண்ணு பண்ணை புதுக்கோட்டை ஜில்லாவில் இருக்கிறது. திருச்சி ஜில்லா வில் இருப்பதாக இந்தக் கேள்விப் பட்டியலில் போட்டு